**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11.06.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஹாக்கி இணையதள துவக்கம் மற்றும் ஹாக்கியின் 50வது ஆண்டு விழா (1972-2022)**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் நல மையம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஹாக்கி சகோதரத்துவம் இணைந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஹாக்கியின் 50வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.

இவ்விழாவை மரியாதைக்குரிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். வெ. கீதாலட்சுமி அவர்கள் ஹாக்கி இணையதளத்தை (https://tnauhf.in/) துவக்கி வைத்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஹாக்கியில் ஓர் அங்கமாக இருப்பதன் பெருமையையும் மற்றும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஹாக்கி மற்றும் தொழில் வளர்ச்சியில் விளையாட்டின் முக்கியத்துவம் பற்றி உரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஹாக்கி சகோதரத்துவத்தின் துணைத் தலைவர். திரு. எஸ். இந்திரஜித் அவர்கள் 50வது ஆண்டுகள் பழமையான ஹாக்கி வழங்கினார் . தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஹாக்கி சகோதரத்துவத்தின் தலைவர் முனைவர் . ஜீ. கிருஷ்ணமோகன் அவர்கள் வாழ்த்துரை நல்கினார்.

முனைவர். நா. மரகதம், முதன்மையர்(மாணவர் நல மையம் ), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர். என். வெங்கடேசபழனிசாமி, முதன்மையர் (வேளாண்மை), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர். எ. ரவிராஜ், முதன்மையர் (வேளாண் பொறியியல்), வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் , தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர். வி. பாலசுப்பிரமணி, தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி , தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர். ஆர். ரவிகேசவன், இயக்குநர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையம் ), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , திரு. பி. குருராஜ் சிங் , வேளாண் இணை இயக்குநர் (ஓய்வு), சென்னை, திரு. வி. திருநாவுக்கரசு, ஐ.எப்.எஸ், முதல்வர், சி.எ.எஸ்.ஒ.எஸ், கோவை மற்றும் திரு. எஸ். ராமசுப்ரமணியம், ஐ.எப்.எஸ், வனப் பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் , ஆனைமலை புலிகள் காப்பகம், கோவை ஆ கியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

தமிழ்நாடு ஹாக்கி சகோதரத்துவ செயற்குழு உறுப்பினர் முனைவர் . ஆர். கௌதம் அவர்களால் பிரம்மாண்டமான சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது , தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக . மாணவர் அணிக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக. விளையாட்டு வீரர்களுக்கும் இடையேயான "**கிக் ஆப் மேட்ச்** " ஐ துவக்கிவைத்தார். இறுதியில் மகளீர் ஹாக்கி கேப்டனான திருமதி . பி. பொன்னுஜக்கம்மாள், முதுகலை ஆராய்ச்சி மாணவி அவர்கள் நன்றியுரை நல்கி விழாவானது இனிதே நிறைவுற்றது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*